

**கேள்வி-பதில்**

பாலசந்தர், கருவியியல்.

**கேள்வி :** தகுதியுள்ள, ஆர்வமுள்ள பல இளைஞர்களால் அரசியல் சார்ந்த சமூகப் பணிகளில் ஈடுபடுவதற்கு பல சமூகக் காரணங்கள் தடையாக உள்ளதை பற்றி தங்கள் கருத்து என்ன?

**பதில் :** வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் தடைகளை உடைத்துக் கொண்டு தான் அடுத்த கட்டத்துக்கு செல்லுகிறோம். அரசியல் சார்ந்த சமூகப் பணி என்பது என்ன என்று முதலில் வரையறுத்துக் கொள்ளுங்கள். அடுத்து ஒவ்வொரு கட்டமாக எடுத்துக் கொள்வோம். முதல் கட்டம் குடும்பம். அடுத்தக் கட்டம் படிப்பிடம். அதற்கடுத்தது வேலையிடம். இந்த ஒவ்வொரு இடத்திலும் நாம் விரும்பும் சமூகப்பணிக்கு என்ன தடை, எந்த அளவுக்கான சமூகப்பணியை இந்த அமைப்புகள் அனுமதிக்கின்றன, எதற்கு மேல் தடுக்கின்றன என்பதைப் பற்றிய புரிதல்கள் நமக்குத் தேவை. அதற்கேற்பதான் ஒவ்வொரு கட்டத்திலும் நம் பணியை விரிவுபடுத்திச் செல்ல இயலும்.

விஜய்சங்கர், பன்பொருள் ஆராய்ச்சி மையம்.

**கேள்வி :** அரசியல் கட்சிகள் பத்திரிக்கை உலகை சார்ந்திருப்பதும், பத்திரிக்கைத் துறை அரசியல் சாயம் கொண்டிருப்பதும் ஆரோக்கியமானதா?

**பதில் :** நிச்சயம் இல்லை. குறிப்பாக இரண்டாவது. முதலாவதைக் கூட ஓரளவு ஏற்றுகொள்ளலாம். ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் தன் கருத்தைப் பரப்ப ஊடகங்களின் உதவி தேவை என்பதால்.

ஸ்ரீநாத், வான்வெளி பொறியியல் துறை.

**கேள்வி :** சர்வதேச அரசியலில் மதச் சார்புகளின் தாக்கம் மற்றும் அதன் விளைவுகள் பற்றி....

**பதில் :** சர்வதேச அரசியலில் மட்டுமல்ல, கிராம அளவிலான அரசியலில் கூட மத சார்பு என்பது ஆபத்தானதுதான். கடவுள் நம்பிக்கை, வழிபாடு இரண்டையும் அவரவர் வீட்டுக்குள்ளேயே வைத்துக் கொண்டால் மட்டுமே அவை சகிக்கக்கூடிய பாதிப்புடன் இருக்க முடியும்.

வெங்கடேஷ், மின்னணு மற்றும் தொடர்பியல் துறை.

**கேள்வி :** கார்ல் மார்க்ஸின் தத்துவங்களை நடைமுறைப் படுத்துவதில் உள்ள சிக்கல்கள் நீங்கலாக, ரசியா மற்றும் சீன கம்யுனிசத்தை ஒப்பிடும்பொழுது, இந்தியாவில் வேறுபட்டிருப்பது போல் தோன்றுகிறதே. அது பற்றி தங்களது கருத்து என்ன?

**பதில் :** ரசியாவிலும் சீனாவிலும் கம்யூனிசம் இல்லை. இருப்பதாக அவர்களும் சொன்னது இல்லை. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் அமைக்கப்படவிருக்கும் ஒரு கம்யூனிச சமுதாயம் என்ற லட்சியத்தை நோக்கிச் செல்ல முயற்சிக்கிற ஒரு சோஷலிச அமைப்பை அங்கே ஏற்படுத்தத்தான் லெனினும் ஸ்டாலினும் மாவோவும் முயற்சித்தார்கள். சோவியத் யூனியனில் அந்த முயற்சி நிர்வாக இயந்திரத்தின் சர்வாதிகாரமாகவும், சீனாவில் கட்சி இயந்திரத்தின் சர்வாதிகாரமாகவும் உருவெடுத்தது. அவ்வளவுதான். சோவியத் யூனியன் சிதறிய பிறகு ரசியாவில் அமைந்தது முழுமையான ஜனநாயகமும் அல்ல. சீனாவில் கட்சி இயந்திரத்தின் சர்வாதிகாரத்தின் கீழ் முதலாளித்துவமும் சோஷலிசமும் கலந்த ஒரு கலவை அரசியல் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த நாடுகள் எல்லாம் தங்கள் மக்களின் அடிப்படைத் தேவைகளை முதல் கட்டத்தில் பூர்த்தி செய்தன என்ற ஒரே ஒரு விஷயம் தான் ஆறுதலானது.

விஜயநந்தினி, பன்பொருள் ஆராய்ச்சி மையம்.

**கேள்வி :** கற்பு என்பது பெண்களுக்கு மட்டும்தான் என்று சமூகம் கருதுவது ஏன்?

**பதில் :** சமூகம் கருதவில்லை. ஆண்கள் கருதுகிறார்கள். சமூகம் என்றால் அது தாங்களும்தான் என்ற உணர்ச்சி, பெண்களுக்கு வராதவரை இது இப்படித்தான் இருக்கும்.

ப்ரீத்தி மேஹர், பன்பொருள் ஆராய்ச்சி மையம்.

**கேள்வி :** சில பத்திரிக்கைகள் வியாபார நோக்கத்திற்காக பெண்களின் ஆபாசப் படங்களை வெளியிடுவது சமூக ஆரோக்கியத்திற்கு உகந்தது அல்ல. ஆனால் இத்தகைய படங்களைத் தவிர்ப்பது தங்களது சமுதாயப் பொறுப்புகளில் ஒன்று என பத்திரிக்கை உலகு உணராதது ஏன்?

**பதில் :** தங்கள் சமுதாயப் பொறுப்புகளை உணராமல் இருப்பது பத்திரிகை உலகில் மட்டுமல்ல, எல்லாத் துறைகளிலும் நடக்கிறது. காரணம், பத்திரிகை உலகமும் சரி, இதர துறைகளும் சரி தங்களை ஒரு தொழிலாகவோ, வணிகமாகவோ மட்டுமே பார்ப்பதுதான். இந்தப் பார்வை நமக்கு குடும்பத்திலிருந்தே ஊட்டி வளர்க்கப்படுகிறது. இப்படிவளர்ந்தவர்கள்தான் பத்திரிகையாளர்களாகவும், முதலாளிகளாகவும், அரசியல் தலைவர்களாகவும், கல்வி அறிஞர்களாகவும் இங்கே இருக்கிறார்கள்.

ஆனந்தகுமார், பொருட் பொறியியல்.

**கேள்வி :** அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சியில் ஈடுபடும் மாணவ மாணவியர்களின் சமூகப் பணிகளாக தாங்கள் நினைப்பது என்ன?

**பதில் :** இவற்றின் பயன் சமூகத்தின் கடைக்கோடி நிலையில் இருப்பவருக்குச் சென்று சேரவேண்டும் என்ற பார்வையுடன் ஒவ்வொன்றிலும் ஈடுபடுவதுதான்.

வேல்மதி, கருவியியல்.

**கேள்வி :** மக்கள் வரிப்பணத்தில், அரசாங்க செலவில் கல்விக் கற்றுவிட்டு வெளிநாடுகளில் தங்கள் திறமையை செலவிடச் செல்பவர்கள் பற்றி தங்கள் விமர்சனம் (குட்டு?)

**பதில் :** அதைத்தடுக்க முடிந்தும் தடுக்காமல் இருக்கும் அரசாங்கத்துக்குத்தான் முதல் குட்டு.

கங்காதரன், மேலாண்மையியல் துறை.

**கேள்வி :** நம் இந்தியா அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் பல முன்னேறிய நாடுகளை விட சில 10 வருடங்கள் பின்தங்கி உள்ளது. இந்தக் குறைபாட்டிற்கு நம் முன்னோர்கள் செய்த தவறு என்ன ?

**பதில் :** எது முன்னேற்றம், எது பின்தங்கியிருத்தல் என்பதெல்லாம் விவாதத்துக்குரியவை. எந்த வளர்ச்சியும் சமூகத்தை ஒட்டுமொத்தமாக வளர்த்திருக்கிறதா என்பதே கவனத்துக்குரியது. சாதி, மதம் முதலிய அமைப்புகள் நம்மை சில விஷயங்களில் பின்னிழுத்துச் செல்லக்கூடியவை என்பதற்கு நம் முன்னோரே பொறுப்பு.

தயாளன், பன்பொருள் ஆராய்ச்சி மையம்.

**கேள்வி :** நிகழ்கால இந்தியச் சமூகத்தில் கல்வி என்பது பணம் ஈட்டும் எந்திரமாக இருக்கிறது என்பதை வேதனைக்குரிய உண்மையாகக் கருதுகிறோம். வளர்ந்த சில மேலை நாட்டு சமூகங்களில் ஓரளவிற்கேனும் கல்வி என்பது கல்விக்காகக் கற்பிக்கப்பட்டு மதிப்பூட்டப்படுகிறது. நம்மிடம் இருக்கும் இந்தக் குறைபாட்டினால் ஏற்படும் சமூகப் பாதிப்புகள் என்னென்ன?

**பதில் :** கல்வி என்பதில் இரு பகுதிகள் உள்ளன. ஒன்று செயல் திறமைக்குத் தேவையான ஆற்றல்களைக் (ஸ்கில்ஸ்) கற்பித்தல். இன்னொன்று வாழ்க்கை பற்றிய மதிப்பீடுகளை (வேல்யூஸ்) உருவாக்குதல். ஒன்று பணத்துக்கானது. மற்றது குணத்துக்கானது. இரண்டில் எது இல்லாவிட்டாலும் வாழ்க்கை முழுமையடையாது என்ற பார்வை இங்கும் இல்லை. அங்கும் இல்லை.

**தமிழ்ப்பேரவை**<br>
**பொங்கல்**<br>
**இதழ் 2008**